**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08042024-7297

Volume: 8

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 07.01.2024

Accepted: 16.03.2024

Published: 01.04.2024

Citation:
Boopalan, A. (2024). Religious Cultures of Sangam Literature in Silappathikaram. *Shanlax International Journal of Tamil Research*, 8(4), 135–140.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i4.7297

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Religious Cultures of Sangam Literature in Silappathikaram

**A. Boopalan**
*Ph.D. Supervisor, Central Institute of Classical Tamil*
*Chennai, Tamil Nadu, India*
*https://orcid.org/0009-0004-2507-7845*

**Abstract**
*The ancient Tamils worshipped Seyon in Kurinji, Mayon in Mullai, Indra in Marutham, Varunan in Neithal, Kotravai in Paalai and participated in the worship of the deities with unity. There was a belief in God, but there was no division among the people according to the deity they worshipped.*
***Keywords: Silappathikaram, Paripaadal, Sangam Songs, Religious Culture, Thirumurukatru Padai***

**References**
1. Swaminatha Iyer, V.Ve, Kurunthogai, Kazhaga Vezhiyeedu, Chennai, Second Edition, 1947.
2. Puliyoorkesigal, Silappathikaram, First Edition, June, 1958.
3. Seyapal, R, New Century Book House (Pvt) Ltd., Chennai, 2004.
4. Dakshinamurthy, Ainkurunuru Moolamum Uraiyum, New Century Book House (Pvt) Ltd., Chennai, 2004.
5. Balasubramanian, K.V., Purananuru Moolamum Uraiyum, New Century Book House (Pvt) Ltd., Chennai, 2004.

# சிலப்பதிகாரத்தில் சங்க இலக்கியம் போற்றியச் சமயப் பண்பாடுகள்

***முனைவர் ஆ. பூபாலன்***
முனைவர் பட்ட மேலாய்வாளர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

***ஆய்வுச்சுருக்கம்***
*பண்டைத் தமிழர் நில அடிப்படையில் குறிஞ்சியில் சேயோனையும், முல்லையில் மாயோனையும், மருதத்தில் இந்திரனையும், நெய்தலில் வருணனையும், பாலையில் கொற்றவையையும் வழிபட்டு வந்தனர் தெய்வ வழிபாட்டில் விழாக்களில் மக்கள் ஒற்றுமையுடன் கலந்து கொண்டனர். தெய்வ நம்பிக்கை இருந்ததே ஒழிய வழிபடும் தெய்வத்திற்கேற்ப மக்களிடையே பிரிவுகள் காணப்படவில்லை.*
***முக்கிய சொற்கள்:*** *சிலப்பதிகாரம், பரிபாடல், சங்கப் பாடல்கள், சமய ப் பண்பாடுகள், திருமுருகாற்றுப் படை*

திருமுருகாற்றுப் படையிலும் பரிபாடலில் இடம்பெறும் செவ்வேள், திருமால் கொற்றவை பாடல்களும், மக்களின் சமய ஒருமைப்பாட்டுணர்வையே வெளிப்படுத்துகின்றன. சங்கப் பாடல்களின் தொடர்ச்சியாகச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் வழிபாட்டு முறையைப் பாடி பல கோட்டங்கள் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**முக்கட் செல்வன் நகர்வலஞ் செயற்கே**
**(புறம். 6. 18)**
**அணங்குடை முருகன் கோட்டம்**
**(புறம்.297-6)**
**வச்சிரத் தடக்கை நெடியோன் கோயில்**
**(புறம். 241. 3)**

தெய்வங்களுக்குத் தனித்தனியே இடம் அமைத்து வழிபட்டதனையும் புறநானூற்றால் அறிகின்றோம். இந்நிலை பெரிதும் வளர்ச்சியடைந்து கோட்டங்கள் பல்கிப் பெருகிய நிலையைச் சிலம்பில் இளங்கோவடிகள் பாடியுள்ளமையைக் காணலாம்.

**அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்**
**புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல்வாயில்**
**உச்சிக் கிழான்கோட்டம் ஊர்க்கோட்டம் வேற்கோட்டம்**
**வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்**
**நிக்கந்தக் கோட்டம் நிலாக்கோட்டம் புக்கு**
**(சிலம்பு. 9 -13)**

கனாத்திறமுரைத்தகாதை கோட்டங்கள் பலவற்றைக் குறிப்பிடுகின்றது.

இவையேயன்றித் காமவேள் கோட்டம், ஐயைகோட்டம், மங்கல மடந்தை கோட்டம் பத்தினிக்கோட்டம், சேவற் கொடியோன் கோட்டம் எனப் பல கோட்டங்கள் கூறப்படுகின்றன.

**பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**
**அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்**
**வால்வளை மேனி வாலியோன் கோயிலும்**
**நீல மேனி நெடியோன் கோயிலும்**
**மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்**
**(சிலம்பு. 5: 169-173)**

புகாரில் இடம் பெற்ற கோயில்களும் கூறப்படுகின்றன. 'கோட்டம்' என்பன சிறியனவாகவும் 'கோயில்' என்பன அளவில் பெரிய கட்டிடமாகவும் இருந்திருக்கலாம். இவ்வாறு மக்களிடையே வழிபடு தெய்வங்கள் பெருகிய நிலையைச் சிலம்பில் காண முடிகின்றது.

***“தீது நன்றும் பிறர்தர வாரா***
***- (புறம். 192: 2)***

***செல்வத்துப் பயனே ஈதல்,***
***துய்ப்பே மெனினே தப்புந பலவே***
***(புறம்.189: 7-8)***

***நீரின்றமையா யாக்கைக் கெல்லாம்,***
***உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே***
***(புறம்.18:18-19)***

என்பன போன்ற வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்கள் பல சமயச் சார்பின்றிப் புறநானூற்றில் உணர்த்தப்படுகின்றன. மேலும், உயிர், ஊழ்வினை, மறுமை பற்றிய சிந்தனைகளும் சான்றோர் உள்ளத்தில் முகிழ்க்கத் தொடங்கி யதனைப் புறநானூற்று,

***கல்பொருது இரங்கு மல்லல் பேர்யாற்றில்***
***நீர்வழிப் படூஉம் புணைபோல ஆருயிர்***
***முறைவழிப் படூஉம் என்பது திறவோர்***
***காட்சியிற் தெளிந்தன மாகலின்***
***(புறம்.192: 8-11)***

என்னும் கணியன் பூங்குன்றன் பாடலும்,

***பயனில் மூப்பின் பல்சான் றீரே***
***கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்***
***பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ***
***நல்லது செய்தல் ஆற்றி ராயினும்***
***அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்***
***எல்லோரும் உவப்பது அன்றியும்.***
***நல்லாற்றுப் படூஉம் நெறியு மாரதுவே***
***(புறம்.195:3-9)***

என்னும் நரிவெரூஉத்தலையார் பாடலும்,

***இம்மைக்குச் செய்தது மறுமைக்கு ஆமெனும்***
***அறவிலை வணிகன் ஆய்அலன்***
***(புறம்:134:1-2)***

என்னும் முடமோசியார் பாடலும் உறுதிப்படுத்துகின்றன.

***இதன் தாக்கத்தைச் சிலம்பிலும் காணலாம்.***
***இம்மைக்கு இன்பமும் மறுமைக்கின்பமும்***
***இம்மையும் மறுமையும் இரண்டும் இன்றியோர்***
***செம்மையில் நிற்பதும் செப்புமின்***
***(சிலம்பு.11: 112-114)***

என்னும் கூற்றும்.

***இம்மைச் செய்தன யானறி நல்வினை***
***உம்மைப் பயன்கொல் ஒருதனி யுழந்துஇத்***
***திருத்தகு மாமணி கொழுந்துடன் போந்தது***
***(சிலம்பு.15:91-93)***

என்னும் மாடலனின் மொழியும்,

***எங் கோமகற்கு, ஊழ்வினை, வந்தக்கடை***
***(சிலம்பு. 23:27-28)***

***“உம்மை வினைந்து உருத்த காலைச்***
***செம்மை யிலோர்க்குச் செய்தவம் உதவாது”***
***(சிலம்பு.23: 171-172)***

என்னும் மதுராபதித் தெய்வத்தின் கூற்றுக்களும் மக்களிடையே ஊழ்வினை, இம்மை மறுமை, உயிர் பற்றிய எண்ணங்கள் வலுவடைந்திருப்பதையும், சமயத் தத்துவங்கள் வளர்ச்சி பெற தொடங்கியிருப்பதையும் உணர்த்துகின்றன.

சமணர், பௌத்தம் வருகையினால் மக்களிடையே மத ஒருமைப்பாட்டுணர்வு குலையத் தொடங்கியதையும் தம் இறைவழிபாடே சிறந்தது எனப்போற்றும் மனப்பான்மையும் காழ்ப்புணர்சியும் வளரத் தொடங்கியதன் சாயலையும்,

***நன்றாய்ந்த நீள்நிமிர்சடை***
***முதுமுதல்வன் வாய்போகாது***
***ஒன்றுபுரிந்த ஈரிரண்டின்***
***ஆறுணர்ந்த ஓர்முதுநூல்***
***இகல்கண்டோர் மிகல்சாய்மார்***
***மெய்யன்ன பொய்யுணர்ந்து***
***பொய் ஓராது மெய்கொளீஇ***
***(புறம்.166:1-7)***

என்னும் ஆவூர் மூலங்கிழாரின் பாடல் வாயிலாக அறியலாம். இறைப்பற்று தீவிர நிலையை அடைவதையே இப்பாடல் காட்டுகின்றது.

இளங்கோ சிலம்பில் சமணத்திற்குச் சிறப்பிடம் நல்கினாலும் வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை முதலியவற்றிலிருந்து எவ்விதக் காழ்ப்புணர்ச்சியுமின்றிப் பிற தெய்வங்களைப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். எனினும், மதுரை செல்வழித் தடம் கூறிய மாங்காட்டு மறையோனுக்கு,

**பிலம்புக வேண்டும் பெற்றி யீங்கில்லை,
கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட்டு இயற்கையின் விளங்கக் காணாய்
இறந்த பிறப்பின் எய்திய எல்லாம்
பிறந்த பிறப்பிற் காணாயோ நீ
வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவது முண்டோ எய்தா அரும்பொருள்"
(சிலம்பு. 11: 153-159)**

என்று கவுந்தியடிகள் கூறும் மறுமொழியில் அவரது மத ஈடுபாடும் பிற மதக் காழ்ப்புணர்ச்சியும் தொனிப்பதைக் காணலாம்.

### சமயக் கொள்கை பரப்பல்

தேன் பருகுதல் கொலைக்கு ஒப்பானது என்ற கொள்கை யுடையவர் சமணர். இதனை 'தேனைக் கொலைக்கொப்ப தென்றாய் நமஸ்தே! எனச் சமணத் தோத்திரத் திரட்டும் 'ஒருவின புலைசு தேன்கள் ஒழிகுதல் ஒழுக்கம் என்றான்' (242) என யசோதர காவியம் மொழிகின்றது. இதனை இளங்கோ கவுந்தியடிகள் வாயிலாக,

**கரும்பிற் றொடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்பு சூழ் பொய்கைத் தூநீர் கலக்கும்
அடங்கா வேட்கையின் அறிவஞ ரெய்திக்
குடங்கையின் நொண்டு கொள்ளவும் கூடும்
(சிலம்பு.10:82- 85)**

எனத் தம்மை மறந்தும் சமயக் கோட்பாட்டில் வழுவிவிடக் கூடாது என்று வலியுறுத்துவதை அறியலாம். மேலும், சிலம்பின் இறுதியில், பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின் எனத் தொடங்கி உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது? செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின் (30:186-201) என இளங்கோ வழங்கும் நீண்டதோர் அறிவுரை மன்னுயிர்க்கெல்லாம் பொதுவாயினும் அவை சமண சமயக் கோட்பாடே காதலும் வீரமும் பொருளாக இருந்த சங்க இலக்கிய நிலைமாறி சமயங்கள் சிறப்பிடம் பெறத் தொடங்கியதைச் சிலம்பால் அறியலாம்.

### வரலாற்றுச் செய்திகள்

இலக்கியம் இன்ப நுகர்ச்சிக்காக, பொழுது போக்கிற்காக மட்டும் படைக்கப்படுவன அல்ல. அவை சமூகத்தின் கடந்த கால வரலாற்றையும் நிகழ்கால வரலாற்றையும் அறிய உதவும் வரலாற்றுப் பெட்டகமாகும். சங்க கால வரலாற்றுச் செய்திகள் பல காலம் கடந்து இன்று வரை பேசப்படுவதற்குச் சிலம்பு ஒரு காரணமாகும். தமிழகத்தின் தென்கடலோரப் பகுதியைக் கடல் கொண்டதால் பாண்டியன், தன் பகைவரான சேர, சோழரை வென்று மீன்கொடி நாட்டியதனை,

**"மலிதிரை ஊர்ந்து தன்மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச் சீர்த் தென்னவன்"
(கலித்.104:1-4)**

என்று கலித்தொகை பகர்கின்றது. இவ்வாறு கடல்கோள்நிகழ்ந்தமையை இளங்கோவும்.

**பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள
(சிலம்பு.11:19-20)**

என்று குறிப்பிடுகின்றார்.

சேரர்கள் கடற்போர் நிகழ்த்தியதையும், கடலில் ஆதிக்கம் செலுத்தியதையும் சங்கப் பாக்கள் காட்டுகின்றன.

**சினமிகு தானை வானவன் குடகல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறர்கலம் செல்கலா..
(புறம்.126: 14-16)**

என்னும் புறப்பாடலாலும்

**கோடுநரல் பௌவங் கலங்க வேலிட்டு
உடைதிரை பரப்பில் படுகடலோட்டிய
வெல்புகழ் குட்டுவன்... (பதி.16:11-13)**

என்னும் பதிற்றுப்பத்தாலும் அறியலாம். இளங்கோவும்,

**.நெடுங்கடலோட்டி
உடன்றுமேல் வந்த ஆரிய மன்னரைக்
கடும்புனல் கங்கைப் பேர்யாற்று வென்றோய்
(சிலம்பு.28:119-121)**

எனவும்,

**பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக் கோட்டிக்**
**கங்கைப்பேர் யாற்றுக்கரை போகிய**
**செங்குட்டுவன். (சிலம்பு.30:13-15)**

எனவும் உரைக்கின்றார்.

கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனின் பேராற்றலை,

**"ஆராச் செருவிற் சோழர் குடிக்குரியோர்**
**ஒன்பதின்மர் வீழ வாயிற்புறுத்து ஓறுத்து**
**நிலைச் செருவின் ஆற்றலை அறுத்து"**
**(பதி. 5.பதி.18-20)**

எனப் பரணர் குறிப்பிடுகின்றார். இளங்கோவும் தம் சேரர் குலப் பரம்பரைச் சிறப்பினை மறவாது

**.. ஏவல் கேளார்**
**வளநாட ழிக்கும் மாண்பினர் ஆதலின்**
**ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன்"**
**(சிலம்பு. 27:120. 122)**

என்றும்.

**"ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை**
**நேரிவாயில் நிலைச் செருவென்று"**
**(சிலம்பு.28:116-117)**

இருந்தான் என்று உரைக்கின்றார். பாரதப் போரில் பாண்டவர், கௌரவர் படையினருக்குப் பெருஞ்சோறளித்த உதியஞ் சேரலாதனை முரஞ்சியர் முடிநாயராயர்.

**ஈர்ஐம் பதின்மரும் பொருது களத்தொழியப்**
**பெருஞ் சோற்று மிகுபதம்வரையாது**
**கொடுத்தோய்" (புறம். 2:15-16)**

எனப் பாராட்டுகின்றார். இந்நிகழ்ச்சியை இளங்கோ வாழ்த்துக் காதையில்,

**"ஓரைவர் ஈர்ஐம்பதின்மர் உடன்று எழுந்த**
**போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த**
**சேரன் பொறையன் மலையன் திறம்பாடி"**
**(பதி. 24)**

ஆடோமோ ஊசல் என்று வஞ்சி மகளிர் பாடுவதாகப் பாடுகிறார். மதுரை கண்ணகி யிட்ட தீயால் கலங்கியதை,

**உரக் குரங்குயர்த்த ஒண்சிலை உரவோன்**
**காவெரி யூட்டிய நாள்போல் கலங்க**
**(சிலம்பு.22:111-112)**

என அர்ச்சுனன் காண்டாவனத்தை எரித்த செய்தியை உவமையாக்குகிறார். இவற்றால் பாரதக்கதை தமிழகத்தில் பரவியிருந்தமையும், இளங்கோவின் ஈடுபாட்டையும் உணர முடிகின்றது.

காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழா நிகழ்த்திய சோழன் தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன் ஆகாயத்தில் இயங்கக்கூடிய ஆற்றல்மிகு அரண்களை அழித்து, அசுரர்களிடமிருந்து தேவர்களையும் மன்னுயிர்களையும் காத்தவன், இந்நிகழ்ச்சியை,

**.......... ஒன்னார்**
**ஓங்கெயிற் கதவம் உருமுச் சுவல் சொறியும்**
**தூங்கெயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை**
**நாடா நல்லிசை நற்றேர்ச் செம்மியன்**
**(சிறு.79-82)**

எனச் சிறுபாணாற்றுப்படையும்.

**ஒன்னார் உட்குந் துன்னருங் கடுந்திறல்**
**தூங்கெயில் எறிந்தநின் ஊங்கனோர் நினைப்பின்**
**(புறம். 39: 5-6)**

எனப் புறநானூறும் புகழ்கின்றன. இளங்கோவும்,

**வெயில் விளங்கு மணிப்பூண்விண்ணவர் வியப்ப**
**எயில் மூன்றெறிந்த இகல்வேல் கொற்றமும்**
**(சிலம்பு. 27:164-165)**

**ஓங்க அரணங் காத்த வுரவோன் உயர்விசும்பில்**
**தூங்கெயில் மூன்றெறிந்த சோழன் காணம்மானை**
**(சிலம்பு.29.பா. 16)**

எனவும், சோழர்குலப்பெருமையையும் பாராட்டத் தவறவில்லை. இச்செய்தியை,

**தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் (14)**

என மணிமேகலையும்,

**விங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்**
**தூங்கு மெயிலுந் தொலைத்தலால்**
**(பா. 49)**

எனப் பழமொழியும் பகர்கின்றன. சோழர்குலத்துச் சிபிச்சக்கரவர்த்தி தன்னை அடைக்கலம் அடைந்த புறாவின் உயிர்காத்த நிகழ்ச்சி.

**புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேல்**
**சினங்கெழு தானைச் செம்பியன் மருக**
**(புறம்.36: 5-6)**

எனப் புறத்தில் (37, 39, 43, 46) நான்கிடங்களில் பேசப்படுகின்றது. இளங்கோவும் தம் காப்பியத்தில்.

> **குறுநடைப் புறவின் நெடுந்துயர் தீர**
> **எறிதரு பருந்தின் இடும்பை நீங்க**
> **அரிந்து உடம்பிட்டோன் அறந்தரு கோலும்**
> (27:166-168)

என்றுரைப்பதோடு வேறு இடங்களிலும் (20, 51-52, 23, 58,29. பா 17) மொழிகின்றார். இவ்வாறு சங்க இலக்கியத்தில் ஐந்நிலங்களின் அடிப்படையில் போற்றப்பட்ட சமய வழிபாடுகள் மற்றும் ஊழ் பற்றி சிலப்பதிகாரத்திலும் இளங்கோவடிகள் அவ்வாறே போற்றிப் பாடியுள்ளார். சங்க காலத்திற்கும் சிலப்பதிகார காலத்திற்கும் நீண்ட இடைவெளியில்லை எனபதையும் நாம் அறிந்துகொள்ளமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. உ. வே. சாமிநாதையர் (பதி), குறுந்தொகை, கழகவெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1947
2. புலியூர்க்கேசிகள், சிலப்பதிகாரம், முதல் 1958.
3. செயபால்.இரா.(உரை.ஆ), அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை, 2004.
4. தட்சிணாமூர்த்தி (உரை.ஆ) ஐங்குறுநூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடெட் சென்னை, 2004.
5. பாலசுப்பிரமணியன்.கு.வை (உரை.ஆ), புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை, 2004.